
# தமிழன் இதயம்

**நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை**

# நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

- (அக்டோபர் 19, 1888 - ஆகஸ்ட் 24, 1972)
- தமிழறிஞரும், கவிஞரும் ஆவார்.
- “கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது”
- பால கங்காதர திலகர் போன்றவர்களின் தீவிரவாதத்தால் ஈர்க்கப்பட்ட இவர் மகாத்மா காந்தியின் கொள்கைகளால் ஆட்கொள்ளப்பட்ட பின் அறப் போராட்டத்தால் மட்டுமே விடுதலையைப் பெறமுடியும் என்ற முடிவுக்கு வந்தவர்.
- இவரது கவிதைகள் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி இருந்ததால் இவர் காந்தியக் கவிஞர் என வழங்கப்படுகிறார்.




# தமிழன் என்றோர் இனமுண்டு

- தமிழன் என்றோர் இனமுண்டு;
- தனியே அவற்கொரு குணமுண்டு;
- அமிழ்தம் அவனுடைய வழியாகும் ;
- அன்பே அவனுடை மொழியாகும்.

# அமிர்தத் திருக்குறள் அடைந்தவனாம்

- அறிவின் கடலைக் கடைந்தவனாம்;
- அமிர்தத் திருக்குறள் அடைந்தவனாம்;
- பொறியின் ஆசையைக் குறைத்திடவே
- பொருந்திய நூல்கள் உரைத்திடுவான்.


- கவிதைச் சுவைகளை வடித்தெடுத்தான் ;
- கம்பன் பாட்டெனப் பெயர்கொடுத்தான் ;
- புவியில் இன்பம் பகர்ந்தவெலாம்
- புண்ணிய முறையில் நுகர்ந்திடுவான்.



# சிலப்பதிகாரம்

- 'பத்தினி சாபம் பலித்துவிடும்'
- பாரில் இம்மொழி ஒலித்திடவே
- சித்திரச் சிலப்பதி காரமதைச்
- செய்தவன் துறவுடை ஓரரசன்.

- சிந்தா மணி,மணி மேகலையும்,
- பத்துப் பாட்டெனும் சேகரமும்,
- நந்தா விளக்கெனத் தமிழ்நாட்டின்
- நாகரி கத்தினை மிகக்காட்டும்.



- தேவா ரம்திரு வாசகமும்
- திகழும் சேக்கி ழார்புகழும்
- ஓவாப் பெருங்கதை ஆழ்வார்கள்
- உரைகளும் தமிழன் வாழ்வாகும்.

- தாயும் ஆனவர் சொன்னவெலாம்
- தமிழன் ஞானம் இன்னதெனும்;
- பாயும் துறவுகொள் பட்டினத்தார்
- பாடலும் தமிழன் பெட்பெனலாம்.

# பாரதி என்னும் பெரும்புலவன்

- நேரெதும் நில்லா ஊக்கமுடன்
- நிமிர்ந்திட அச்சம் போக்கிவிடும்
- பாரதி என்னும் பெரும்புலவன்
- பாடலும் தமிழன் தரும்புகழாம்.